Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 199/2025** |
| Deposition of witness for | :: | **PW. 4** |
| Name | :: | **மேரி** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**06.05.2026**

**முதல் விசாரணை**:

1. நான் வாழ்வாங்கியில் குடியிருந்து வருகிறேன். அசா.1 கருப்பசாமி எனது தங்கையின் கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும், அவர்கள் எனது வீட்டிற்கு அருகே குடியிருக்கிறார்கள். கடந்த 06.02.2025 ம் தேதி மாலை 06.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது எங்களது தெருவிற்கு தண்ணீர் லாரி வந்தபோது மலைச்சாமி அவருடைய இருசக்கர வாகனத்தை தெருவின் குறுக்கே நிறுத்தி இருந்தார். அதனால் தண்ணீர் லாரி உள்ளே வரமுடியவில்லை. எனவே லாரியின் ஓட்டுநர் முதலில் வண்டியை எடுக்க சொன்னார். அதன்பின்னர் அசா.1, மலைச்சாமியிடம் அவரது வண்டியை எடுக்க சொன்னார். அப்போது மலைச்சாமி தகாத வார்த்தையால் எந்த சுண்ணியும் என்னை ஓம்ப முடியாது என்று அசா.1 ஐ திட்டினார்.

2. அப்போது இருவருக்குள்ளும் பிரச்சனையானது. மலைச்சாமியின் தந்தை கிருஷ்ணகுமார் அசா.1 னின் இரண்டு கைகளையும் பின்னால் இருந்து பிடித்து கொண்டார். மலைச்சாமி, அசா.1 னின் கழுத்து, வலது தோள்பட்டை மற்றும் உதட்டில் கையால் அடித்தார். அப்போது நானும், எனது அக்கா சாந்தி, எனது தங்கை கௌரி ஆகியோர்கள் இருந்து

சண்டையை விலக்கிவிட்டோம். பின்னர் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அசா.1 ஐ அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அசா.1 ஐ மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது நான் வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்து ஒரு 10 நிமிடத்தில் நான் அங்கு சென்றேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் " மலைச்சாமி தகாத வார்த்தையால் எந்த சுண்ணியும் என்னை ஓம்ப முடியாது என்று அசா.1 ஐ திட்டினார்" என்று கூறிய விவரத்தை நான் போலீசார் விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் சரிதான். அசா.1 ஐ கிருஷ்ணகுமார் பின்னால் இருந்து பிடித்து கொண்டதாக முதல் விசாரணையில் கூறிய விவரத்தை போலீசார் விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் சரியல்ல கூறினேன்.

2. அசா.1 மலைச்சாமியிடம் இருசக்கர வாகனத்தை எடுக்க சொன்னதாக முதல் விசாரணையில் நான் கூறிய விவரத்தை போலீசார் விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் சரியல்ல, கூறினேன். பிரச்சனை ஆரம்பித்து எவ்வளவு நேரத்தில் எனது அக்கா சாந்தி சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் தண்ணீர் லாரி வந்தவுடன் வந்துவிட்டார். நான் போலீசார் விசாரணையின் போதும், நீதிமன்ற முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையின் போதும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் எனது சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. அசா.1 எனது தங்கையின் கணவர் என்ற காரணத்தினால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 199/2025** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| Name | :: | **சாந்தி** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**06.05.2026**
**முதல் விசாரணை**:

1. நான் வாழ்வாங்கியில் குடியிருந்து அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். அசா.1 கருப்பசாமி எனது தங்கையின் கணவர் ஆவார். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும், அவர்கள் பக்கத்து வீட்டில் குடியிருக்கிறார்கள். கடந்த 06.02.2025 ம் தேதி மாலை 06.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது தண்ணீர் லாரி வந்தது. அப்போது எங்கள் தெருவில் உள்ள மலைச்சாமி தெருவின் நடுவே இருசக்கர வாகனத்தை நிறுத்தியிருந்தார். அதனால் தண்ணீர் லாரி தெருவிற்குள் கடைசி வரை வரமுடியவில்லை. அதனால் மலைச்சாமியிடம் அவருடைய வாகனத்தை எடுக்க சொல்லி அசா.1 கருப்பசாமி, மலைச்சாமியிடம் கேட்டார். அப்போது மலைச்சாமி அவருடைய வண்டியை எடுக்க முடியாது என்று சொல்லி யாரை வேண்டுமானாலும் அழைத்து வாருங்கள் யார் வந்தாலும் ஓம்ப முடியாது என்று சொன்னார். உடனே எனது தங்கையின் கணவரான அசா1 க்கும், மற்றும் மலைச்சாமி, அவரின் தந்தையான கிருஷ்ணகுமாருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது.

2. அப்போது அசா.1 னின் இரண்டு கைகளையும் பின்பக்கமாக நின்று

கிருஷ்ணகுமார் பிடித்து கொண்டார். அப்போது மலைச்சாமி அசா.1 னின் வலது பக்க கழுத்தில் கடித்து வைத்தார், வலது பக்க கன்னத்தில் கையை வைத்து அடித்தார். மேலும் மலைச்சாமி, அசா.1 ஐ உதட்டில் அடித்தார். அசா.1 க்கு கழுத்திலும், உதட்டிலும் காயம் ஏற்பட்டது. அப்போது நானும், எனது மற்றொரு தங்கையான மேரி ஆகியோர்கள் சேர்ந்து சண்டையை விலக்கிவிட்டோம். பின்னர் சிகிச்சைக்காக அசா.1 ஐ அரசு பேருந்தில் அழைத்து கொண்டு அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு வந்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதிரிகளும், அசா.1ம் சண்டை போடும்போது எவ்வளவு கழித்து சென்றேன் என்றால் சுமார் 5 நிமிடம் கழித்து சென்றேன், அப்போது இருவருக்குள்ளும் வாய் தகராறு நடந்து கொண்டிருந்தது. அசா.1 ஐ அடிக்கும்போது நான் உடன் இருந்தேன். மலைச்சாமி அவரது இருசக்கர வாகனத்தை தெருவின் நடுவே நிறுத்தி இருந்ததாக கூறிய விவரத்தை போலீசார் விசாரணையின்போது நான் கூறினேனா என்றால் கூறினேன். நான் முதல் விசாரணையில் எதிரிகள் அசா.1 ஐ பார்த்து யார் வந்தாலும் ஓம்ப முடியாது என்று கூறிய விவரத்தை போலீசார் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் சரியல்ல, கூறினேன். நான் மேற்படி விவரங்கள் அனைத்தையும் போலீசார் விசாரணையின்போது கூறாமல் தற்போது வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல.

2. நான் எனது முதல் விசாரணையில் "அசா.1 னின் இரண்டு கைகளையும் பின்பக்கமாக நின்று கிருஷ்ணகுமார் பிடித்து கொண்டார். அப்போது மலைச்சாமி அசா.1 னின் வலது பக்க கழுத்தில் கடித்து வைத்தார், வலது பக்க கன்னத்தில் கையை வைத்து அடித்தார்" என்று கூறிய விவரத்தை போலீசார் விசாரணையின்போது சொல்லாமல் தற்போது மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி மேரி எப்போது சம்பவ இடத்திற்கு வந்தார் நான் வரும்போதே என்னுடன் சேர்ந்து வந்தார். புகார்தாரரின் மனைவி கௌரிக்கும், எதிரி கிருஷ்ணகுமாருக்கும் இடையே அவ்வப்போது கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் சரிதான். தற்சமயம் கொடுக்கல் வாங்கல் இருவருக்கும் இருக்கிறதா என்றால் சண்டைக்கு பின் இல்லை.

3. கடந்த 03.12.2025ம் தேதி கிருஷ்ணகுமாரின் மகள் அசா.1னின் மீது புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சம்பவத்திற்கு முன்பு அசா.1னின் மீது எதிரிகள் தரப்பில் ஏதேனும் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் போலீசார் விசாரணையின் போதும், நீதிமன்ற முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையின் போதும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் எனது சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. அசா.1 எனது தங்கையின் கணவர் என்ற காரணத்தினால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**